1990-

# தமிழீழ தேசிய பாடல்கள்

1 9 9 0

Appropriate Technology ...
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.________

ஆக்கியோன்

திரு. ச. சுப்பிரமணியம்

நல்லூர்.

90.10.04

# பொருடக்கம்

01) ஆசிரியத்துவம்
02) தமிழீழத்தாயின் அடிமை விலங்குறுப்போம்
03) ஈழத்தாய் அழைக்கின்ருள்
04) களம் காண வாரீர்
05) அன்னைக்கீனம் வந்ததடா
06) நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி.
07) தமிழ் மொழி வளர
08) சுதந்திரமர மொன்று நாட்டுவோம்
09) டட் டட் டட் டெனும் ஒலியுமடா
10) ஈழ மெங்கள் நாடடா 1
11) ஈழமெங்கள் நாடடா 11
12) தமிழீழம் என்கின்ற போதினிலே
13) சின்னஞ்சிறுவர்களே
14) தமிழா தமிழா ஓடாதே
15) ஈழம் மீட்போம் வாருமே
16) வாராயே ஈழமகனே

-ரு-ஈ-ஈ-

## ஆசிரியத்துவம்

முத்து முத்தான வேங்கைகள் -
தமிழீழத்தில் வாழுமிளஞ் சிறார்கள்
பற்றும்பாசமும் வைத்தவர் மேல் - நல்ல
பாதையில் சேர்க்கும் பணியெமதே -

வாழ்வினில் சித்தியடைந்திடவே - நல்ல
அடிப்படை அறிவுடன், பொருள் வளமும் - நல்ல
நீதியுணர்வுள்ள குடிமக்களும் வாழும்
பூரணமனிதனை நாம்படைப்போம்:

முத்து முத்தான...

நாட்டின் பற்று வளர்ந்திடவே - நல்ல
குடிமகன் கடமையை உணர்ந்திடவே - தினம்
பள்ளிச் சிறாரின் மனத்தினிலே - நாமும்
வீரத்தின் விதைகளை யூன்றிடுவோம்.

முத்துமுத்தான...

சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை - அதை
நிலைநிறுத்தல் எங்கள் மனுநீதி
நீதிக்காகப் போராடும் மனிதனைக
ஞாலம் போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்

முத்துமுத்தான...

--*--*--

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

## தமிழீழத்தாயின் அடிமை விலங்கறுப்போம்

தமிழீழ மண்ணின் சுதந்திரம் தலைக்காக்க
அயராது உழைக்கின்ற புலிகளைப் பாரீர்
விழியேதும் தூங்காமல் தமிழீழம் தலைக்காக்க
அழிவோடு போராடும் புலிகளைப்பாரீர் -

வளமான தமிழீழம் நலமாக வாழ
அயராது உழைக்கின்ற கரும்புலியைப்பாரீர்
அவர் உரமான எண்ணங்கள் விரைவாக நிறைவேற
சுயமான எண்ணத்தில் களம் காணவாரீர்
தமிழீழ மண்ணின் -

வாழ்க்கையும் நிலைக்காது வறுமையும் நிலைக்காது
தோல்வியும் நிலைக்காது துன்பமும் நிலைக்காது
கொள்கையை ஏற்றிட்டால் துன்பமும் நிலைக்காது
வேள்வியைத் தொடங்கிட்டால் வெற்றிவந்தே சேரும்
தமிழீழ . . .

சிங்களன் வருகின்றான் தமிழீழம் அழிக்க
வெஞ்சினம் கொள்ளடா வீரமறத்தமிழா
கெஞ்சிடும் தமிழ்த்தாயின் அடிமை விலங்கொடிக்க
வஞ்சிகள் எல்லோரும் வழிசமைப்போம் -
வாரீர்
தமிழீழமண்ணின் - -

## ஈழத்தாய் அழைக்கிருள்

ஈழத்தாய் அழைக்கின்ருள்
ஈழத்தாய் அழைக்கின்ருள்
ஈழ நகர் சிங்களத்தாய் அழியுதம்மா
இங்கு நாலு திசையும் சண்டை நடக்குதம்மா

ஏனிந்த அழிவுகள் ஏனிந்தச் சாவுகள்
ஏனிந்த அழிவுகள் ஏனிந்தச் சாவுகள்

அதிகாலை செல்லடி கேட்கலையோ—நீங்கள்
அதனுலே துன்பம் அடையலையோ
ஹெலியாலே சூடுகள் வாங்கலையோ—உங்கள்
மனத்தாலே கிலியின்னும் போகலையோ
ஈழத்தாய் அழைக்கின்ருள்......
புலிவீரர் வாழும் நிலமம்மா—இது
புலிக்கொடி பறக்கும் நாடம்மா
ஊராய் புலியாகும் காலமம்மா
இந்த ஊரினிலே புலியாட்சி நடக்குதம்மா
ஈழத்தாய் அழைக்கிருள்.....
நாட்டுக்காகப் போராடும் காலமிது—உங்கள்
வீட்டுக்காய் போராடும் காலமிது
ஈழத்தாய் பெற்றெடுத்த இளைஞர்களே—உங்கள்
ஈழத்தைக் காப்பாற்ற வாருங்களே.
"                "

—ஈழத்தாய் அழைக்கின்ருள்....

களம் __ கர்ணவாரீர்

அச்சமென்பது மடமையடா-அஞ்சாமை
ஈழவர் உரிமையடா.

வெற்றி முழக்கம் கேட்குதடா வீரத்தமிழாபுறப்படடா
சுற்றிவருகுது இராணுவம் சுழன்று நீயும்போராடு
அச்சமென்பது....

ஆண்டதமிழர் நாமிங்கே ஆளப்படுதல் முறையாமோ
மாண்டவீரர் தனைநினைந்து சமாட்சிவேண்டிப்போராடு
அச்சமென்பது....

வேங்கை உறுமல் கேட்குதடா வீரத்தமிழா புறப்படடா
வெற்றி வருகுது முன்னாலே வேண்டி நீயும் போராடு
அச்சமென்பது.....

கடலில் அலைகள் ஓய்வதில்லை புலிகள் தோல்விகண்ட
—தில்லை
உடலில் உயிரும் உள்ளவரை கடமையை நீயும் ஆற்றிடடா
அச்சமென்பது....

## அன்னைக் கீனம் வந்ததடா

அன்னைக்கீனம் வந்ததடா
பெண்மைக்கீனம் வந்ததடா
இன்னுமேன் தயக்கமடா
துள்ளிவாடா துவக்கெடுத்து

தீயோர் வைத்த தீயினிலே
செந்தமிழீழம் எரியுதடா
பாயும் புலியாய் நீமாறி
மானம் காக்கப் புறப்பட்டா அன்னைக்கீனம்....

நித்தம் நித்தம் சாகின்றோம்
எத்தர் கையால் சாகின்றோம்
ஈழம் வேண்டிப்போராட
காளை நீயும் எழுந்திடடா அன்னைக்கீனம்...

வீரமறவர் தமிழர் தனை
வீணர் கூட்டம் ஆளுவதோ
திரும்பிமிக்க இனம் எமதே
திரண்டு நீயும் போராடு அன்னைக்.....

கத்தி பொல்லுவாளுடனே
கயவர் கூட்டம் வருகுதடா
இம்முன் எமக்கேன் பிரிவினைகள்

இணைந்தேபுறப்படு போராட அன்னைக்....

காட்டிக் கொடுக்கச் சிலருண்டு
காசுக்கு விற்கச் சிலருண்டு
வெட்டிச்சாய்ப்போம் வீணர்தனை
செல்லக்கிளி போல் குதித்தெழுவோம் அன்னைக்...

பொய்யும் புழுகும் பெருக்கிடவே
லங்காபுவத்தும் வளருதடா
செய்யும் அநீதி அழிந்திடவே
கையிலாயுதம் ஏந்திடடா அன்னைக்கீனம்...
அண்ணன் தம்பி ஐயாவே
அக்கா தங்கை அம்மாவே
சத்தியம் ஒன்றே எடுத்திடுவோம்
ஈழம் ஒன்றே தாயகமாம் அன்னைக்கீனம்..

## நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி

நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி—ஒரு
சரித்திரம் இருக்குது தம்பி

அறிவு இருந்தால் துணிவு வந்திடும்
துணிவு இருந்தால் வீரனாக்கிடும்
இரண்டும் இருந்தால் புலிகளாக்கிடும்
புலிகளானால் ஈழம் வந்திடும்
நல்ல நல்ல....

ஈழம் என்பது சொந்த நாடடா
ஈழ நாட்டையும் அந்யன் ஆள்வதா
காலம் நெருங்குது ஈழம் கண்டிட
வேளை நெருங்குது நாட்டைக்காத்திட
நல்ல நல்ல....

பயந்த கண்களில் மரணம் தென்படும்
வீரன்கண்களில் வெற்றி தென்படும்
வீரர் கூடினால் வீறுகொண்டிடும்
வீறு கொண்டிட்டால் வெற்றிவந்திடும்
நல்ல நல்ல...

கோழைக் கோலத்தைக் கையைவிட்டிடு
வீரன் கோலத்தை நீயும் கொண்டிடு
பந்தபாசத்தைப் பக்கம் வைத்திடு
ஈழம் காண்பதே நோக்கம் கொண்டிடு
நல்ல நல்ல....

## தமிழ் மொழி வளர

தமிழ்மொழி வளர.
தமிழ் ஈழம் மலர
தமிழர்கள் உழைப்போமே
மாநிலம்தன்னில் தமிழ் மொழி மிளிர
மாணவர் உழைப்போமே.
மாசற்ற சிறுவர் மாண்புடன் வாழ்ந்து
மகிழ்வுடன் வாழ்வோமே
தமிழ்மொழி.....
தாயகமண்ணில் அடிமைகளாக தமிழர்கள் வாழ்வதோ
பேதங்கள் நீக்கி, அறிவினைக் கொண்டு
ஆட்சியைக் கொள்வோமே
தமிழர்கள் ஆண்ட தாயமண்ணில்
சிங்களன் ஆள்வதோ
தமிழ்மொழி...
சிறுவர்கள் நாங்கள் சீரிய வழியில்
தமிழீழம் அமைத்திடுவோம்
சிறுவர்கள் எமக்குச் சுதந்திரம் உண்டு
அரசியல் பேசிடவே.

அறியாமை நீக்கி துணிவினை வளர்த்து
ஆண்மையைக் கொள்வோமே
" "
தமிழ்மொழி..

## சுதந்திர மர மொன்று நாட்டுவோம்

சுதந்திரமரமொன்று நாட்டுவோம் - நாம்
சுதந்திர மர மொன்று நாட்டுவோம்.

தமிழீழம் என்பது சொந்த எங்கள் நாடு
சிங்களர் ஆட்சியில் ஆளப்படலாமோ
சுதந்திரமரமொன்று..

பள்ளிச் சிறுவர் நாமும் பயத்துடன் வாழாமல்
ஆயகலைகள் கற்று ஆண்மையுடன் வாழ்ந்து
சுதந்திரமரமொன்று..

சுதந்திரத்துக்கே யுழைப்போம்
சுகதுக்கங்களை மறப்போம்
சுதந்திர உணர்வுடன் துன்பங்களைச் சுமந்து
சுதந்திரமரமொன்று..

* * * *

## டட் டட் டட் டெனும் ஒலியுமடா

டட் டட் டட் டெனும் ஒலியுமடா
அது துப்பாக்கி சுடுகின்ற ஒலியுமடா
டும் டும் டும் எனும் ஒலியுமடா
அது பீரங்கி சுடுகின்ற ஓசையடா
டமார் டமார் எனும் ஓசையடா
ஹெல்லடிக்கின்ற ஓசையடா
சளார் சளார் எனும் ஒலியுமடா – அது
பொம்மர் அடிக்கின்ற ஓசையடா –
டட் டட் டட் டெனும்..

காலை எழுந்ததும் டமார் டமார்
மாலை ஆனதும் "டுமீல் டுமீல்
ஏனிந்த ஓசைகள் எண்ணிப்பாரடா
இதயமுள்ள நீ எண்ணிப் பாரடா
ஏனிந்த ஓசைகள் எண்ணிப்பாரடா
இதயமுள்ள நீ எண்ணிப்பாரடா
டட் டட்...

தமிழீழம் என்றொரு நாடுண்டு – அதைச்
சிங்களன் ஆள்கின்ற நிலையுண்டு
வேண்டாம் எமக்கிந்த நிலையென்று
வீரம் கொண்டதால் வந்ததிது
டட் டட்...

மனிதன் உரிமையை நிலைநாட்ட
மனத்திடம் கொண்டு வாழ்ந்திடடா
மாணவனுந்தன் உரிமைதனை
மறந்திடலாமோ தமிழ் மகனே
டட் டட்...

* * * * *

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.________

## ஈழமெங்கள் நாட்டா !

ஈழமெங்கள் நாட்டா
காப்பதெங் கடனடா
நாளை யென்றிராதேடா
இன்றேவீரனுகடா

வீரம்மிக்க தமிழர்கள்
வாழ்ந்த திந்த நாடடா
வீணே காலம் போக்காமல்
இன்றே வீரனுகடா

ஈழமெங்கள்...

ஆண்டதமிழர் நாமிங்கே
ஆளப்படுதல் ஆகுமோ
மாண்டவீரர் மில்லர் போல்
மாட்சி வேண்டி ஆடுவோம்.

ஈழமெங்கள்...

எங்கள் மொழி தமிழ்மொழி
தென்மை வாய்ந்த தமிழ்மொழி
எங்கள் காலம் தன்னிலே
ஏற்றம் மிக்க காக்குவோம்

ஈழமெங்கள்நாடடா..

ㅁㅁㅁ

## ஈழமெங்கள் நாட்டா 11

ஈழமெங்கள் நாட்டா
காப்பதெங் கடனடா
நாளையென்றிராதேடா
இன்றே வீரனாகடா
காடு கனிவளமெல்லாம் மிக்கதெங்கள் நாட்டா
கைத் தொழில்கள் செய்து நாம்
பொருள் வளம் பெருக்குவோம்.
ஈழமெங்கள்...

கடல் வளம் மிக்க நாட்டா
கடற் தொழில் வளம் பெருக்கடா
கடமை கட்டுப் பாட்டினை
கண்ணியமாகக் கொள்ளடா
நாட்டின் நல்ல பிரஜையாய் நீ வாழ்வு வாழடா
அன்பு பண்பு கொண்டு நீ ஆதரிப்பாய் மக்களை
ஈழமெங்கள்...

மனித ஜாதி என்றுமே சகோதரராய் வாழடா
சமய பேதமின்றியே சமத்துவமாய் வாழடா
ஆணும் பெண்ணும் சமத்துவம் கொண்டு இங்கு
வாழுவோம்
உழவுத் தொழில் செய்து நீ தன்நிறைவு காணடா
ஈழமெங்கள்...

ஈழமென்றலட்சியம் காண்பதின்று நிட்சயம்
திலீபன் சொன்னபாதையில், மக்கள் புரட்சி நிட்சயம்
புரிகள் என்ற வீரர்கள் போர் முனையில் தீரர்கள்
ஈழமென்ற லட்சியம் கொண்டியங்கும் வீரர்கள்
—ஈழமெங்கள்

)))

## தமிழீழம் என்கின்ற போதினிலே

தமிழீழம் என்கின்ற போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே— எங்கள்

வேதம் நிறைந்தது எம்நாடு—உயர்.
வீரம் செறிந்தது எம்நாடு—
கலைகள் நிறைந்தது எம்நாடு—இளம்.
கலைஞர் நிறைந்தது எம்நாடு..
தமிழீழம்....

கடல்வளம் மிக்கது எம்நாடு—உயர்
நீர்வளம் மிக்கது எம்நாடு
இந்து சமுத்திர ஓரத்திலே யொரு
துறைமுகம் கொண்டது எம்நாடு
தமிழீழம்...

மில்லர் பிறந்தது இந்நாடு—உயர்
திலீபன் பிறந்தது இந்நாடு
சிங்களர் ஆட்சியின் வேர றுக்கவென்று
வேங்கைகள் பிறந்தது இந்நாடு
தமிழீழம்...

கல்வி சிறந்தது எம்நாடு—பெரும்
அறிஞர் நிறைந்தது எம்நாடு
ஒழுக்கம் ஓங்கிட வழிகாட்டும்—அருங்
கோவில்கள் மிக்கது எம்நாடு—
தமிழீழம்......

தமிழர்கள் வாழ்வதிந்நாடு
முஸ்லீம்கள் வாழ்வதும் இந்நாடு
மதங்கள் வேறுகவிருந்தாலும்
மன ஒற்றுமை கொண்டது இந்நாடு
தமிழீழம்...

---

## சின்னஞ் சிறுவர்களே

சின்னஞ்சிறுவர்களே—தமிழீழ வீரமறவர்களே
உந்தன் மொழிவளர்த்தே—உனது தாயகம் காத்திடுவாய்

கன்னல் மொழியெமதே—உலகில்
மூத்த மொழியெமதே
பிள்ளை மொழியெமதே—எங்கள்
உயிரும் தமிழ் மொழியே

தெள்ளுமொழியெமதே—தேனிலும்
இனிய தமிழ் மொழியே
எங்கள் மொழிதனிலே—என்றும்
ஆங்கிலம் கலக்காதே

சின்னஞ்சிறுவர்களே...

உலகமொழி தேவை —அது
உலகறியத் தேவை
விஞ்ஞானம் கற்கவென்று—எமது
சொந்தமொழி மறவேல்

வேதம்புதிது அல்ல—எமக்கு
விஞ்ஞானம் புதிதல்ல
நாதம் புதிது அல்ல—எமக்கு
கணிதமும் புதிது அல்ல

சின்னஞ்சிறு...

மருத்துவம் தெரியாதா—எமக்கு
சாஸ்திரம் தெரியாதா
புவியியல் தெரியாதா—உனக்குச்
சரித்திரம் தெரியாதா

விமானம் புதிது அல்ல—எமக்கு
எறிகணை புதிது அல்ல
வியூகம் புதிது அல்ல—எமக்கு
வெற்றியும் புதிது அல்ல

பயத்தைவிட்டுவிடு—அடிமைப்
புத்தியை விட்டுவிடு
புத்தியைத் தீட்டிவிடு—நீயும்
வெற்றியைக் கண்டுவிடு.

---

## தமிழா தமிழா ஓடாதே

தமிழா தமிழா ஓடாதே
தாழ்ந்து நீயும் போகாதே
குட்டக் குட்டக்குனிந்திட்டால்
எட்டியுதைப்பான் சிங்களனே

வீரம் மிக்க புலிவீரர் உந்தன் அணியில் நிற்கின்றார்
வீரம் கொண்டே புறப்படடா வேங்கைக் கூட்டம்—
சேர்ந்திடடா
குட்டிக்கலைத்தான் சிங்களவன் ஐம்பத்தெட்டாம்—
ஆண்டினிலே
விரட்டியடித்தோம் சிங்களனை தொண்ணூறாம்—
ஆண்டினிலே
மயிலே மயிலே என்றிட்டால் மயிலும் இடுமோ சிறகுதனை
தர்மவழியில் நாம் நின்றே தற்கபாடம் படிப்பிப்போம்
தமிழா.....
ஆண்டதமிழர் நாமென்ற சரித்திரத்தை அறிந்திடடா
அடிமைத்தமிழர் நாமென்ற சரித்திரத்தை மாற்றிடடா
உந்தன் பூமி பறிபோக ஊரைவிட்டு ஓடாதே
உந்தன் பூமி மீட்க உரிமை உனக்கேஉள்ளதடா
தமிழா.....

))))

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.________

## ஈழம் மீட்போம் வாருமே

ஈழம் மீட்போம் வாருமே
ஈழம் மீட்போம் வாருமே
சிங்களரின் ஆட்சிபோக்கி
ஈழம் மீட்போம் வாருமே

எங்கள் உயிர் தானடா ஈழத்தமிழ் நாடடா
புத்துணர்ச்சி கொண்டுமே புலிகளாக மாறுவோம்
ஈழம்...

ஜாதி பேதமற்றது எங்கள் தமிழ்நாடடா
வீரனாக மாறியே வெற்றியையும் காணடா
ஈழம்....

சின்னஞ்சிறுவர் நாமுமே சிந்தனைகள் செய்குவோம்
எங்கள் அடிமை நிலைதனை நீக்க வழிதேடுவோம்
ஈழம்...

கடல் வளமும் நிலவளமும் மிக்கதெங்கள் நாடடா
வளந்தனைப் பெருக்கியே சுதந்திரமாகவாழுவோம்
ஈழம்..

வீரம்மிக்க புலிவீரர் வாழ்ந்ததெங்கள் நாடடா
மில்லர் போல மாறியே உந்தன் நாட்டை மீளடா
ஈழம்...

திலீபனையும் பாரடா தியாகச்சின்னம் அவனடா
சோதியாவைப் போலவே சுதந்திரத்தைத்தேடடா
ஈழம்....

குமரப்பாவைப்பாரடா குழந்தைமுகம் பாரடா
புலேந்தியைப் போலவே பூமியிலே வாழடா
ஈழம்....

பிரபாகரன் தலைமையிலே புலிப்படையும் போகுது
நீயும் சேர்ந்து கொள்ளடா நிம்மதியைத்தேடடா
ஈழம்....

## வாராயோ ஈழமகனே

வாராயோ ஈழமகனே
கேளாயோ உந்தன் நிலையை
வாராயோ ஈழமகனே

தமிழீழம் உந்தன் நாடு தன்னிகரில்லாதநாடு
சிங்களன் ஆட்சியினாலே சிதைந்து கிடக்குதுபாரு
வாராயோ....

சுதந்திர ஈழம் வேண்டி-போரிடும் புலிகளைப் பாரீர்
சுதந்திர உணர்வையும் கொண்டு களத்திலே பிரவேசி
வாராயோ...

சங்கிலியாண்டதெம்பூமி-சரித்திரம் கண்டதெம்பூமி
சிங்களனாட்சியினாலே அடிமைப்பட்டதையும்பாரு
வாராயோ...

எம்மொழி காக்கவென்று உயிர்விட்டபுலிகளைப்பாரீர்
உத்தமவீரரின் எண்ணம் உயிர்பெறுமதுவே திண்ணம்
வாராயோ...

சுயநலம் கொண்டுநீயும் அரதேசம் போகவேண்டாம்
பொதுநலம் கொண்டு நீயும் புலிப்படைதனிலே சேரு
வாராயோ....

... Technical ...
121, POINT-... ROAD
NALLUR, ...
No.......

## கும்மி.

தமிழர் எங்கள் நாடுதனை
உயிரெனவே கொள்வோம்
அடிமைநிலை போக்கி நாங்கள்
சுதந்திரமாய் வாழ்வோம்
தமிழர் எங்கள் கலை தனையே
மதித்து நாங்கள் நடப்போம்
தமிழீழ சுதந்திரத்தை
வழியெடுத்துச் செல்வோம்.
தன்னானே தனத் தனதன்னானே-தன்னானே தனத் தன்னானே.

தமிழர் எங்கள் தாயகத்து
வளம் பெருக்கிக் கொள்வோம்
களந்தனிலே நின்று நாங்கள்
தாயகத்தைக் காப்போம்
இளஞ்சிறுவர் நாங்களுமே
ஈழத்துக்காய் உழைப்போம்
ஈழம் எங்கள் நாடு என்று
இசையுடனே படிப்போம். தன்னானே---

சிங்களவின் ஆட்சிதனை

சினத்துடனே எதிர்ப்போம்.
எங்களர்ச்சி மலர்ந்திடவே
புலிப்படையில் சேர்வோம்
[illegible]லே உயிர் நீத்த
வீரர்களை நினைப்போம்
தமிழர் என்ற உணர்வு கொண்டு
தாயகத்தை மீட்போம்.
தன்னானே .....

வாழ்க்கைக்கான கல்விதனைப்
பாலர் நாங்கள் கற்போம்
பாரினிலே உயர்வு கொண்ட
மனிதராக வாழ்வோம்.
மனிதரெங்கள் உரிமைதனை
மான்புடனே கற்போம்
உரிமைகளைத் தடுப்பவரை
உரிமையுடன் எதிர்ப்போம்.
தன்னானே .....

தியாகச் செம்மல் திலீபனையே
தினம் தினமும் நினைப்போம்
தீரத்துடன் தியாகம் செய்த
மில்லரையும் நினைப்போம்.
களப்பலியாய் ஆகிப்போன
சங்கரையும் நினைப்போம்
நாட்டுக்காக உயிர் நீத்த
மங்கையரை நினைப்போம்.
தன்னானே .....

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.